# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# Ang Mo Kio Tamil Methodist Church

## 29th செப்டம்பர் / September 2024 - சுகமளிக்கும் ஆராதனை
## Healing Service

✝ **ஆராதனைக்கு அழைப்பு** — **திருமதி. பூமா மகேஷ்**
Call to Worship — Mrs. Booma Mahesh

**இறைவணக்கப்பாடல்** — **பாடகர் குழு**
Introit — Choir

**ஜெபம்** — **திருமதி. பூமா மகேஷ்**
Prayer — Mrs. Booma Mahesh

✝ **தொடக்க பாடல்** — **சபையார் இணைந்து**
Opening Song — Congregation

### போற்றும் போற்றும்

*1. போற்றும் போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்
பாரிலேயும் நாம சங்கீர்த்தனம் செய்ய
மாந்தர் யாரும் வாரும் ஆனந்தமாய்!
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசு நாதர் நம்மையும் தாங்குவார்;
போற்றும் போற்றும்! தெய்வ குமாரனைப் போற்றும்!
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.*

*2. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்;
பாடுபட்டுப் பிராணத் தியாகமும்செய்து
வானலோக வாசலைத் திறந்தார்
மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும் என்றும்!
வாழ்க, வாழ்க, ஜெகத்து ரட்சகா!
அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி!
வல்ல நாதா, கருணை நாயகா!*

*3. போற்றும், போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்
போற்றும், போற்றும், மீட்பர் மகத்துவமாக
ஆட்சிசெய்வார் நித்திய காலமும்
ஏக ராஜா, மாட்சிமையோடு வந்து
இயேசு ஸ்வாமி, பூமியில் ஆளுமேன்
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.*

✝ **மாறி வாசித்தல் 39ம் ஞாயிறு** — **சபையார் இணைந்து**
“சங்கீதம் 118” — Congregation

**“களிகூர்ந்து மகிழக்கடவோம்”**

Psalter Reading - “Psalm 118”

✝ **தந்தை போற்றி** — **சபையார் இணைந்து**
Gloria Patri — Congregation

**துதி ஆராதனை**
Singspiration

**சாட்சியின் நேரம்**
Time of Testimony

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**பரமண்டல ஜெபம்** — **சபையார் இணைந்து**
Lord’s Prayer — Congregation

✝ **காணிக்கை பாடல்** — **சபையார் இணைந்து**
Offertory Song — Congregation

### இவரே பெருமான்

**இவரே பெருமான், மற்றுப்
பேர் அலவே பூமான், - இவரே பெருமான்.**

*1. கவலைக் கிடங்கொடுத் தறியார் - வேறு
பலவினை யாதுமே தெரியார் - இப்
புவனமீது நமக்குரியார்*

*2. குருடர்களுக் குதவும் விழியாம், - பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம், - தெய்வம்
இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம்.*

*3. பலபிணி தீர்க்கும் பரிகாரி, - சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி, - எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி.*

*4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன், - கொடு*
*மறம்விடு பவர்க்கருள் முத்தன் - இங்கே*
*இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன். .*

*5. அலகைதனை ஜெயித்த வீரன், - பவ*
*உலகை ரட்சித்த எழிற்பேரன், - விண்*
*ணுலக வாழ் தேவ குமாரன்.*

*6. பொன்னுலகந் தனில்வாழ் யோகன், - அருள்*
*துன்ன உலகில் நன்மைத் தேகன், - நம்பால்*
*தன்னை யளித்த ஓர் தியாகன்.*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***மிஸ். கிறிஸ்டின் அம்மனி***
***வெளி 5 : 11 – 14***
Scripture Reading — Miss. Christine Ammani
**Revelation 5 : 11 - 14**

***அருளுரை*** — ***மறைதிரு. மோசஸ் அழகேசன்***
Sermon — Rev. Moses Alagesan

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

***இயேசு அழைக்கிறார்***

***இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்***
***ஆவலாய் உன்னை தம் கரங்கள் நீட்டியே***
***இயேசு அழைக்கிறார்***

*1. எத்துன்ப நேரத்திலும் ஆறுதல் உனக்களிப்பார்*
*என்றுணர்ந்து நீ இயேசுவை நோக்கினால்*
*எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய்*

*2. கண்ணீர் எல்லாம் துடைப்பார் கண்மணிபோல் காப்பார்*
*கார்மேகம் போன்ற கஷ்டங்கள் வந்தாலும்*
*கருத்துடன் உன்னைக் காத்திடவே*

*3. சோர்வடையும் நேரத்தில் பெலன் உனக்களிப்பார்*
*அவர் உன் வெளிச்சம் இரட்சிப்பு மானதால்*
*தாமதமின்றி நீ வந்திடுவாய்*

*4. சகல வியாதியையும் குணமாக்க வல்லவராம்*
*யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே*
*கிருபையால் அன்பை அளித்திடதே*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***மனப்பாட வசனங்கள்*** — ***சபையார் இணைந்து***
Weekly Memory Verses — Congregation

***வெளி 5 : 13***
**Revelation 5 : 13**

***13. அப்பொழுது வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் சமுத்திரத்திலுள்ளவைகளும் அவற்றுளடங்கிய வஸ்துக்கள் யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

***சபையார் நிற்கவும்*** ∕ **Indicates Congregation standing**